අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.10.

நே.மு.ப.இல: ............ சபை.இ: ........

வண/ திரு/ திருமதி/ செல்வி .....................................................

.......................................................

.......................................................

**<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் கீழ் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்</u>**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2021.04.25ம் திகதியன்று நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படவுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தாங்கள் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. குறித்த நேர்முகப் பரீட்சைக்காக பத்தரமுல்ல, பெலவத்த, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் 04ம் மாடியில் உள்ள கேட்போர்கூடத்திற்கு 2024.11..... ம் திகதியன்று மு.ப. ...... மணிக்கு சமூகமளிக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அன்றைய தினத்தில் கீழே I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களதும் மூலப் பிரதிகளை உள்ளடக்கிய கோவை ஒன்றையும், குறித்த ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் உள்ளடக்கப்பட்ட அதனை ஒத்த இன்னுமொரு கோவையை பிரத்தியேகமாகவும் அவற்றின் மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் சபை இலக்கத்தைக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும். அனைத்து சான்றிதழ்கள்/ ஆவணங்களதும் பிரதிகளின் மீதும் அவை உண்மைப் பிரதிகள் என்பதாக சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரராலும் அது தொடர்பில் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

I. பொது நேர்முகப் பரீட்சை

i. பொது நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்
ii. தேசிய அடையாள அட்டை
iii. பிறப்புச் சான்றிதழ்
iv. கல்விச் சான்றிதழ்கள் – க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களுக்குரிய பட்டச் சான்றிதழ் மற்றும் விவரிக்கப்பட்ட பெறுபேறு ஆவணங்கள், பட்டப் பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ், ஆட்சேர்ப்புக்கு தகுதி பெறுவதற்குரிய வேறு சான்றிதழ்கள்
v. இக் கடிதத்தின் பக்க இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்தின் உள்ளடக்கத்தின் 1/3 பகுதி விண்ணப்பித்துள்ள பாடத்திற்குரியவையாகும் என்பதாக பல்கலைக்கழகத்தின் **பதிவாளரால்** உறுதிப்படுத்தும் கடிதம்

vi. சத்தியப் பிரமாணம் (தேவைக்கேற்ப) – குறித்த கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்கள்/ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் அதற்குரியதாக சத்தியப் பிரமாணமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

vii. அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (03 மாதங்களுக்குள்)

viii. அண்மையில் பெற்றுக் கொண்ட நடத்தைச் சான்றிதழ் (சமாதான நீதவான் ஒருவரிடமிருந்து)

04. அடிப்படை தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது மேற்படி ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் பரிசோதிக்கப்பட்டு, ஆட்சேர்ப்பு செய்வதற்கான **அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம்** தகுதிகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆகையால் இலக்கம் 2162 மற்றும் 2020.02.07ம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவித்தல் மற்றும் தங்களது விண்ணப்பப் படிவத்திற்கமைய அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து சான்றிதழ்கள்/ ஆவணங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளையும் அன்றைய தினத்தில் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்னிலைப்படுத்துவது கட்டாயம் என்பதுடன், பின்னராக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள்/ ஆவணங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. உரிய பட்டச் சான்றிதழ்களின் விவரிக்கப்பட்ட பெறுபேறுகள் உள்ளடங்கிய ஆவணம் நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் சான்றிதழ்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

06. விண்ணப்பித்துள்ள பாடத்துறையினை பிரதான பாடமொன்றாக பட்டப் படிப்பின் போது கற்றுள்ளதாகவும், பட்டத்தின் மொத்தப் பாட அலகுகளின் (கிரெடிட்) மூன்றில் ஒரு பகுதியேனும் விண்ணப்பித்த பாடத்திற்குரியவையாகும் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்கள்/ ஆவணங்கள் மற்றும் அவ் விடயங்களை உறுதிப்படுத்துவதற்குரியதாக பல்கலைக்கழக பதிவாளரால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் சான்றிதழ் ஒன்றை (www.moe.gov.lk எனும் இவ் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பு 01 மாதிரிப் படிவத்திற்கமைய) நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்த வேண்டும்.

07. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றிருப்பின், உரிய பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும் என்பதை உறுதிப்படுத்தி அவ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதமொன்றை நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதுடன், பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் அத்தகைய கடிதங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

08. உரிய அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் திகதிக்கு (2020.03.06ம் திகதிக்கு) முன்னராக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்திலேயே நேர்முகப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் விண்ணப்பித்துள்ள மொழிமூலத்திலேயே பெறப்பட்டிருக்க வேண்டும் என்பது அத்தியாவசியமானதல்ல.

10 . இந்த நேர்முகப் பரீட்சைக்கு வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுகின்றனர் என்பதால், இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது மாத்திரம் தகுதிகளை மதிப்பிடுவதற்கான/ பிரயோக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு அல்லது இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெறுவதற்கான தகுதியல்ல என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

11. அத்துடன் இந்தக் கடிதம் கிடைத்த உடன், வார நாட்களில் கடமை நேரத்தில் 011-2787083 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து கடிதம் கிடைக்கப்பெற்றமைய உறுதிப்படுத்துமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்:- ஜே.எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்

ஆர்.டீ ஜமிந்த
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)